கடுவெளிச் சித்தர்

தல வரலாறு



சங்கை இரா. இந்திரா ராகவன்
எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.

6-3

கடுவெளி சித்தர் தல வரலாறு

சங்கை இரா. இந்திரா ராகவன்
எம்.ஏ.,எம்.எட்.,எம்.ஃபில்

கடுவெளிச் சித்தர் தியான பீடம் – அறக்கட்டளை
கடுவெளிச் சித்தரகம்,
கடுவெளி, எடையூர் (அஞ்சல்) 614702,
திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.

KADUVELI SIDDHAR THALA VARALARU

by Sangai R. Indira Raghavan

முதல் பதிப்பு	:	2014
விலை	:	₹ 50.00
மொத்தப் பக்கங்கள்	:	56
வெளியிட்டோர்	:	கடுவெளிச் சித்தர் தியான பீடம் - அறக்கட்டளை கடுவெளிச் சித்தரகம், கடுவெளி, எடையூர் (அஞ்சல்) - 614702 திருத்துறைப்பூண்டி வட்டம் திருவாரூர் மாவட்டம்
ஒளி அச்சு மற்றும் முன் அட்டை வடிவமைப்பு	:	ரேமா கிராஃபிக்ஸ், சென்னை-600 099.
அச்சிட்டோர்	:	எம்.கே. கிராபிக்ஸ், சென்னை-600 021. தொலைபேசி: 9840828213

6—3

என்னுரை

ஷீரடி சாயிபாபாவின் 108 நாமாவளிகள், பக்தர்களுக்கு பாபாவின் பதில்கள், சாயி பக்தைகளும் - பாபாவும், இவற்றை அடுத்து பாபா என்னை எழுதக் கட்டளையிட்டது 'கடுவெளிச் சித்தர் தல வரலாறு'.

டிசம்பர் 2004ஆம் ஆண்டில் கடுவெளிக்கு நானும், எனது தந்தையும் (66 ஏக்கர் பூமி தானம் செய்தவர்) தந்தையின் பாசமிகு நண்பர் கவிமாமணி மயனுடன் (சென்னை) சென்றபோது, அப்பாவும், கவிமாமணி மயன் அவர்களும் சித்தர்கள், அவதார புருஷர்கள், மகான்கள் பற்றி ஒரு நீண்ட உரையாடலை கடுவெளியிலே நடத்தினோம்.

அப்பா, கடுவெளிச் சித்தரின் 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' பாடலை அடிக்கடி பாடி, கருத்துக்களையும் கூறுவார். மட்டுமல்லாமல் இப்பிறப்பு, முற்பிறப்பு இவற்றின் கடுமையான பாவம், சாபம் போக்குபவர் கடுவெளிச் சித்தர் என்பதையும் அடிக்கடி விளக்குவார்.

25 டிசம்பர் 2004 அன்று அப்பாவுடன் (ஸ்ரீலஸ்ரீ ராகவன் பாபா) அம்மா சரோஜா ராகவன், சகோதரர் இடையூர் மணிமாறன், சகோதரர் இடையூர் சிவமதி (எழுத்தாளர்) ஆகியோர் கடுவெளி செல்லும் பாக்கியம் பெற்றனர். மிகப்பெரிய பேரிழப்பு (சுனாமி) ஏற்படப் போகும் நாளன்று, அந்த நொடியில் கடுவெளிச் சித்தர் பக்தரை (என்

அப்பா) அழைத்து, நடக்கப் போகும் மிகப்பெரிய இழப்பு பற்றி கூற விரும்பினாரோ என்னவோ?

நான் சிறு குழந்தையாக இருந்தபோதே 'நந்தவனத்திலோர் ஆண்டி' என்ற பாடலை அப்பா பாடக் கேட்டுள்ளேன். அப்பாவோடு கடுவெளி சென்று ஆன்மீக அனுபவம் பெற்றேன். மட்டுமல்ல, ஸ்ரீலஸ்ரீ குமார் பாபாவோடும் நான் கடுவெளிச் சித்தர் பீடம் சென்று சித்தரைத் தரிசிக்கும் பேறு பெற்றவள்.

ஸ்ரீலஸ்ரீ குமார் பாபா அவர்கள், 'முன்ஜென்மத் தொடர்பு இல்லாமல் கடுவெளிச் சித்தரிடம் யாரும் வரமுடியாது' என்றார். அன்று அப்பாவோடு நான் கடுவெளி சென்ற மெய்-அனுபவத்தோடு, இன்று இந்நூலை எழுத என்னை கட்டளையிட்ட கடுவெளி சித்தரின் பேரன்பை நான் எப்படி விவரிப்பேன்? எழுதியது நானல்ல. என்னை இயக்கும் இறைவனே.

பூர்வ ஜென்மத் தொடர்பு இருந்தால் மட்டுமே ஒரு மனிதன் பிறிதொரு மனிதனைச் சந்திக்க இயலும். அப்படிப்பட்ட நிலையில் சித்தர்களின் பீடம் கட்டும் முயற்சியிலும் - ஸ்ரீ பரமானந்த ஆலயம் கட்டும் திருப்பணியிலும் ஈடுபடுவது என்பது சித்தர்கள் - மகாபுருஷர்கள்- மகான்கள் இவர்களின் ஆசியால் மட்டுமே வெற்றி பெற முடியும்.

இக்கோயிலைப் புதுப்பிக்கவும், சித்தர் பீடம் அமைக்கவும் குறைந்தது 30 லட்சம் ரூபாய் ஆகும். இக்கோயில் புதுப்பிக்கப்படவும், சித்தர் பீடம் புதிதாகக் கட்டப்படுமானால், திருவாரூர் மாவட்டம்

முழுதுவதுக்குமே இது மிகப்பெரிய பெருமையையும், சிறப்பையும் தரும்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்லும் ஒரு மிகப்பெரிய புண்ணியத் தலமாக மாற பக்த கோடிகள் முன்வர வேண்டும். இந்த ஆலயத் திருப்பணியில் ஈடுபடும் பக்தர்களை ஸ்ரீ வாலாம்பிகை உடனுறை பதவி தரும் ஸ்ரீ பரமநாதரும், ஸ்ரீ கடுவெளிச் சித்தரும் ஆசிர்வதித்து, அவர்கள் வம்சாவளிகள் சிறப்புற வாழ ஆசி புரிவார்கள். இது உண்மை.

இந்த மாபெரும் புண்ணியப் பணியில் ஈடுபட்டுள்ள சிவனடியார்கள், சிவபக்தர்கள், கடுவெளிச் சித்தரின் பக்தர்கள், பொது நிலையினர், ஊர்மக்கள் மற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் ஸ்ரீ கடுவெளிச் சித்தர் பூரண ஆசி நல்குவார்'என்பதில் ஐயமில்லை.

மிகப்பெரிய அளவில் ஸ்ரீ வாலாம்பிகை உடனுறை பதவிதரும் ஸ்ரீ பரமநாதர் ஆலயமும், ஸ்ரீ கடுவெளிச் சித்தர் பீடமும் விரைவில் அமைய ஸ்ரீ கடுவெளிச் சித்தர் அருள்புரிவாராக!

சங்கை இரா. இந்திரா ராகவன்
எம்.ஏ.,எம்.எட்.,எம்.ஃபில்.
சங்கந்தி



கடுவெளிச் சித்தர்

1. பதினெண் சித்தர்கள்

சித்தர் வணக்கம்

நந்தி, அகத்தியர், மூலர், புண்ணாக்கீசர்,
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக் கண்ணர்
நந்தியிடைக் காடரும், போகர், புலிக்கையீசர்
கருவூரார், கொங்கணவர், காலஞ்சி,
சிந்தி எழுகண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி
தேரையரும் குதம்பையரும் சட்டை நாதர்
செந்தமிழ் சேர் சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்தி வாழ்வோம்!

சித்தர்கள் யார்?

கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றும், கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் தேவாரம் கூறுகின்றது.

மூச்சினை அடக்கி, யோக ஆற்றலினால் உடலில் உள்ள மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலைமுடி ஆகிய ஆறு இடங்களிலும் மனதை முறையாக நாட்டி, குண்டலினியை எழுப்பி, பற்பல அனுபவமும் வெற்றியும் கண்டு, அப்பாலுள்ள எல்லாம் என பொருளில் நினைத்து சித்தி பெறுவதே சித்தர் என்ற வழக்கம் பரவியுள்ளது எனத் தமிழறிஞர் தொ.போ. மீனாட்சி சுந்தரம் குறிப்பிடுகின்றார்.

அகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வபக்தி கொண்டு இதனுள் அருள்சக்தியை வளர்த்து, ஆன்ம பரிணாமத்தில் மக்களிடையே வானவர்களாகவும், மனிதத் தெய்வங்களாகவும் உலவி, பெருவாழ்வு வாழ்ந்து, அருளை வழங்கி வருகின்ற பெரியோர்களே மகான்கள். அவர்களே சித்தர்கள் என்று விளக்கம் தருகிறார் மீ.ப. சோமசுந்தரனார்.

இதெல்லாம் சரி. சித்தர்களைப் பற்றி சித்தர்கள் என்ன சொல்கிறார்கள் எனப் பார்ப்போம்.

"ஆத்தாளைப் பூசித்தோன் அவனே சித்தன்"

என்கிறார் கருவூரார்.

"எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி
ஏகாமல் வாசனையை யடித்தோன் சித்தன்"

என்கிறார் சட்டை முனி.

"சிந்தைதெளிந் திருப்பவன் ஆர், அவனே சித்தன்"

"செகமெல்லாம் சிவமென்றே அறிந்தோன் சித்தன்
சிறந்து மனந் தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்"

என்கிறார் வான்மீகர்.

"சித்தர் சிவத்தைக் கண்டவர்"

என்கிறார் திருமூலர்.

சித்தர்கள் அழியாத உடலைப் பெற்றவர்கள், இரும்பைத் தங்கமாக்கும் இரசவாதக் கலையை அறிந்தவர்கள், கூடுவிட்டுக் கூடுபாயும் சக்தி பெற்றவர்கள், முக்கால நிகழ்வுகளையும் அறியக் கூடியவர்கள், நினைத்தவுடன் நினைத்த வடிவம் எடுக்கும் ஆற்றல்

பெற்றவர்கள், நீரிலும் நெருப்பிலும் வானத்திலும் நடந்து செல்லும் வல்லமை பெற்றவர்கள், உலகம் முழுவதையும் தன் வசப்படுத்தி நடத்தும் வசித்துவம் ஆற்றல் பெற்றவர்கள், இயற்கைக்கு மாறான அற்புதங்களை எல்லாம் செய்ய வல்லவர்கள் என்றெல்லாம் சித்தர்கள் பற்றிக் கூறுவர்.

சித்தர்கள் வெறுமனே அற்புதங்கள் நிகழ்த்துவதற்காக இந்தப் பூவுலகில் பிறப்பெடுக்கவில்லை. மனிதனை, அவனது பிறப்பின் நோக்கத்தை அறிவித்து இறைவனுடன் இனிதாக இணைத்து வைக்க வேண்டியே அவதரித்தனர்.

மண்ணில் அடங்கியும், இறைவனுடன் இரண்டறக் கலந்தும் அமரத்துவம் பெற்ற ஞானிகள், காலவரம்பின்றி நம்முடன் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பதினெண் சித்தர்கள்

சித்தர்கள் எண்ணிக்கை அளவு கடந்தது. ஆனாலும் உலகியல் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் பதினெண் சித்தர் எனக் காலம் காலமாகக் குறிப்பிட்டு வருகின்றனர்.

மதுரையின் சோமசுந்தரக் கடவுளே முதல் சித்தனாக அவதாரம் கொண்டார் என்பது திருவிளையாடற் புராணம் கூறும் கருத்தாகும். இவர் செய்த அற்புதங்கள் சொல்லி மாளாது.

பிற சித்தர்கள் - சித்தருக்கும் சித்தராய் முதல் சித்தராக விளங்கிய சிவனின் மாணாக்கர் என்பது சித்தர்களால் உணர்த்தப் பெறும் செய்தியாகும்.

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரும் ஆமே"

என்று சித்தர் தலைவனாம் சிவனாரிடம் உபதேசம் பெற்றவர்கள் பட்டியலைத் தருகிறார் திருமூலர் பெருமான்.

நந்திகள் நால்வர் என்பது சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்போர். சிவயோக மாமுனி என்பது அகத்தியரைக் குறிக்கும். பதஞ்சலி என்பது பாம்பாட்டிச் சித்தரையும், வியாக்ரமர் என்பது புலிப்பாணியையும் குறிக்கும்.

சித்தர்கள் உறைந்துள்ள தலங்கள்

நந்தீசர்	-	காசி
அகத்தியர்	-	திருவனந்தபுரம், கும்பகோணம்
போகர்	-	பழனி
திருமூலர்	-	தில்லை
பதஞ்சலி	-	சேதுசமுத்திரம், திருப்பட்டூர், ராமேஸ்வரம், சிதம்பரம்
தன்வந்திரி	-	வைத்தீஸ்வரன்கோயில்
கருவூரார்	-	கரூர்
சுந்தரானந்தர்	-	மதுரை
மச்சமுனி	-	திருப்பரங்குன்றம், திருவானைக்காவல்
இராமதேவர்	-	அழகர்கோயில்
சட்டமுனிவர்	-	திருவரங்கம், சீர்காழி
கமலமுனிவர்	-	திருவாரூர், மதுரை
வான்மீகர்	-	எட்டுக்குடி

குதம்பைச்சித்தர்	-	மாயூரம்
பாம்பாட்டி சித்தர்	-	விருத்தாசலம், சங்கரன்கோவில், மருதமலை, துவாரகை
இடைக்காடர்	-	திருவண்ணாமலை, இடைக்காட்டூர், திருவிடைமருதூர்
கோரக்கர்	-	பேரூர், வடக்கு பொய்கைநல்லூர், கோரக்பூர்
பிரம்மமுனி	-	பேரூர்
கொங்கணவர்	-	திருப்பதி
காலாங்கி	-	காஞ்சிபுரம்
கடுவெளிச் சித்தர்	-	காஞ்சிபுரம், கடுவெளி
அகப்பேய் சித்தர்	-	திருவையாறு
எழுகண் சித்தர்	-	நாகப்பட்டினம்
புலிப்பாணி	-	திருப்பட்டூர்
சிவவாக்கியர்	-	கும்பகோணம்
புலத்தியர்	-	பாபநாசம் (பொதிகைமலைச் சாரல்), ஆவுடையார் கோயில்
தேரையர்	-	பொதிகை சார்ந்த தோரணமலை (கேரளா)
காகபுசுண்டர்	-	உறையூர், உத்தரகோசமங்கை

◆◆◆

2. கடுவெளிச் சித்தர் யார்?

சிவாய நமஹ

அருள்மிகு கடுவெளிச் சித்தர் துணை

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்த பல்வேறு சித்த புருஷர்கள், மகான்கள் வரிசையில் கடுவெளி என்ற ஊரிலே அமர்ந்து பக்தர்களுக்கெல்லாம் அருள்பாலித்து வருபவர் கடுவெளிச் சித்தர் ஆவார்.

யோகம், தவம், தானம் இவற்றின் மூலம் இறைநிலையை அடைய முடியும். கடும்தவம் செய்வதாலும், தானம் - தருமங்கள் செய்வதன் மூலமும் இறைவனை அடைய முடியும் என்ற தத்துவத்தை பக்தர்களுக்கு விளக்கியவர் 'கடுவெளிச் சித்தர்'.

பதினெண் சித்தர்கள் வரிசையில் கடுவெளிச் சித்தரும் ஒருவர். சித்தர்கள் தங்கள் சித்து விளையாடல்கள் மூலம் பக்தர்களை ஆட்கொள்பவர்கள். கோடிக்கணக்கான சித்தர்கள் இந்த அண்டவெளியை ஆட்சி செய்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பக்தி மார்க்கத்தில் சிறந்தவர்கள்.

அகத்தியர், போகர், இடைக்காட்டுச் சித்தர், திருமூலர், கருவூரார், பாபாஜி சித்தர், வடக்குப் பொய்கை நல்லூர் வாழ் கோரக்கர், பாம்பாட்டிச் சித்தர், புலிப்பாணிச் சித்தர்,

தேரையர் இவ்வாறு சித்தர்களின் பட்டியலைப் பெரிதாக்கிக் கொண்டே போகலாம்.

அகத்தியர் தலையில் தட்ட நாணி, விந்திய மலை தலை குனிந்தது. அவர் செல்ல வழி விட்டது.

போகரும் கோரக்கரும் சேர்ந்து பழனி மலையின் நவபாஷாண சிலை வடித்தனர். சீனாவிற்கு தங்கள் சித்து விளையாடல் மூலம் சென்று கோவில் அமைத்தனர்.

இடைக்காட்டுச் சித்தர் தம் தவவலிமையால் கோள்களை மயக்கி மழை பெய்யச் செய்து வறுமை நீக்கினார்.

புலியை பூனைபோல-ஆக்கினார் புலிப்பாணிச் சித்தர்.

வாடிய பயிரைக் கண்டு வாடினார் வள்ளலார். பசிக்கொடுமை அகன்றிட என்றுமே அணைந்திடாத அடுப்பினைப் பற்றிடச் செய்து ஏழைகளுக்கு வயிறார உணவிட்டார்.

அரசன் இராஜராஜ சோழன் கட்டிய கோயிலில் ஆவுடை ஒழுங்கே அமையாமல் இருந்தது கண்டு தனது வாய் எச்சில் வெற்றிலை பாக்கு வைத்து லிங்கத்தைச் சரியாகப் பொருத்தி, மன்னனை மகிழ்வெய்த வைத்தார் கருவூரார்.

இவ்வாறு சித்தர்கள் தயவாலே மக்களும், மன்னர்களும் மகிழ்வுடன் வாழ்ந்தார்கள்.

கடுவெளிச் சித்தர் வழிபட்ட ஆலயத்தின் இன்றைய நிலை

காலம் காலமாக சான்றுகளாக நின்ற சித்தர் பீடமும் ஆலயமும் - இருந்த இடத்தை மட்டுமே இன்று காண முடிகின்றது. சிறிய அளவில் கட்டப்பட்டுள்ள விநாயகர்

கோயிலும், சிவலிங்கத்தடி குளமும், பக்தர்கள் வணங்கிச் செல்ல காணப்படுகின்றது.

பௌர்ணமி இதர முக்கிய நாட்களில் மக்கள் கூட்டமாக வந்து தியானம் மேற்கொண்டு, தங்கள் உடல் நலம், மன வலிமை பெற்றுச் செல்கிறார்கள்.

கிடைத்தற்கரிய பெரிய அரிய சக்தி இங்கே கிடைக்கின்றது. அவர் வணங்கிய பரமநாதர் ஆலயம், சித்தர் பீடம் பெரிய அளவில் அமைக்கப்பட ஆன்மீக ஆர்வலர்கள், ஊர்ப் பெரியவர்கள், சிவத் தொண்டர்கள், சமூக நலத் தொண்டர்கள், பொதுமக்கள் பலரும் பெரிய முயற்சியை மேற்கொண்டு உள்ளனர். இக்கோயிலைக் கட்டும் அரிய பணியில் ஈடுபட்டுள்ள அன்பர் அகத்திய ஜீவ அருள் நாடியைப் பார்த்தபோது, மிகப்பெரிய அளவில் இவ்வாலயம் கட்டப்படும் எனவும் அகத்தியர், வசிஷ்டர், காகபுஜண்டர் இதற்கு உதவி செய்வார்கள் எனவும் உத்தரவு கிடைத்தது. கங்கை நீர்கொண்டு 'மஹா ருத்திரயாகம் செய்' என உத்தரவு அருளப்பட்டது. அதன்படி மஹாருத்திர யாகம் வேதவிற்பன்னர்கள், துறவிகள், அருள்வழி நிற்பவர்கள் துணையுடன் நடந்த பின்னரே கோயில் கட்டும் பணி துவங்கியுள்ளது.

ஒரே நேரத்தில் மஹாருத்திர யாகமும், அபிஷேகமும் நடந்தது. நல்ல மனிதர்களின் முயற்சியாலும், பொருள் உதவியாலும் யாகமும் ஹோமமும் செய்விக்கப்பட்டு அன்னதானம் மண்டகப்படிதாரர்களால் நடைபெற்றது.

அனைத்துச் சித்தர்களும், நம் அறிவையும் ஞானத்தையும் வளர்ப்பதற்கான எளிய பாடல்களைத் தந்துள்ளனர்.

அந்த வகையில் சித்தர் மரபின் மிகவும் புகழ்பெற்ற பாடல் ஒன்றை கடுவெளிச் சித்தர் தந்துள்ளார். அப்பாடல் இதோ:-

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"

கடுவெளி எங்குள்ளது?

கடுவெளி என்ற பரந்துபட்ட பூமியானது பழைய தஞ்சை மாவட்டம் (தற்போதைய திருவாரூர்) மாவட்டம், திருத்துறைப்பூண்டி கூற்றம் எடையூரிலிருந்து மன்னார்குடி செல்லும் சாலையில் சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பாடல் பெற்ற 177 சிவாலயங்களில் கடுவெளிச் சித்தர் வழிபட்ட பரமநாத சுவாமி ஆலயத்தைச் சுற்றி ஆறு பாடல் பெற்ற தலங்கள் அமைந்திருப்பது இந்த ஆலயத்தின் தனிச்சிறப்பு ஆகும்.

105 - திருக்களர்

106 - திருச்சிட்டேமம் (நேமம்)

107 - திரு உசாத்தானம் (கோவிலூர்)

108 - திரு இடும்பாவனம்

109 - திருக்கடிகுளம் (கற்பகநாதர் குளம்)

இந்த ஆலயங்களின் நடுநாயகமாக விளங்கும் சிற்றூர் கடுவெளி ஆகும். இக்கடுவெளியில் அமர்ந்து கடுமையான தியானம் செய்து கடுவெளிச் சித்தர் ஜீவசமாதி அடைந்துள்ளார்.

பரமானந்த சுவாமி பழைய கருவறை அமைப்பு 12 x 12 சதுர அடி.

அர்த்த மண்டபம் அமைப்பு 11 x 6½ ச.அ.

மகா மண்டபம் அமைப்பு 18 x 12 ச

என்பதாக பழைய குறிப்பேடுகளில் காணப்படுகிறது.

இக்கடுவெளியில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பழைமையான பரமநாத சுவாமி ஆலயம் உள்ளது. ஸ்ரீ வாலாம்பிகை உடனுறை பதவி தரும் ஸ்ரீ பரமநாதர் ஆலயம் மிக்க இடிபாடுகளுக்கிடையே பார்ப்பவர் மனம் நெகிழ்ந்து கண்ணீர் சிந்தும்படி இருந்தது. ஊர் மக்கள், கடுவெளிச் சித்தர் தொண்டர்கள், சிவ அன்பர்கள் ஆகியோரால் இக்கோயிலைப் புதிதாகக் கட்டி முடிக்கவும், கடுவெளிச் சித்தர் பீடம் அமைக்கவும் சீரிய முயற்சி முடுக்கி விடப்பட்டுள்ளது.

பரமநாத சுவாமி பூஜை ஆரம்பமான விபரத்தைப் பார்த்தால், 1990ல் இத்தலப் பெருமானுக்கு பூஜை ஆரம்பிக்கப்பட்டது. 18.05.1998ல் அரசு மற்றும் வேம்புவிற்கு திருக்கல்யாண உற்சவம் செய்விக்கப்பட்டது. 24.05.2002ல் சித்தி விநாயகருக்கு ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

20.05.1990ல் அருள்மிகு சற்குணநாத சுவாமி ஆலயம் - இடும்பாவனம் செயல் அலுவலர் பா. பரமசிவம் அவர்களால் இந்தக் கோயில் பராமரிக்கப்பட்டது.

05.01.2000 அன்று இந்து அறநிலையத் துறையினரால் ஒருகால பூஜை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

சித்தர் பீடம் அமையும் இடம்

சித்தர்கள் பிறந்த இடமும், சித்தர்கள் உலவிய இடமும், சித்தர்கள் சமாதி அடைந்த இடமும், சித்தர்கள் அருளாசி கிட்டும் இடமும், சித்தர் பீடமாக அமையும். கடுவெளிச் சித்தர் பிறந்து, அருளாசி புரிந்து, ஜீவசமாதி அடைந்த இடம் கடுவெளி ஆகும்.

கடுவெளி என்னும் பெருவெளி

கடுவெளி என்றால் என்ன? கடுவெளி என்பது எல்லையில்லாமல் விரிந்து பரந்த பிரபஞ்சப் பெருவெளி ஆகும். தமது அத்துணைப் பாடல்களில் பிரபஞ்சப் பெருவெளியின் சிறப்புகளைப் பற்றி பாடியுள்ளார் கடுவெளி சித்தர்.

கடவுள் எங்கு உள்ளார்? கடவுள் உன் உள்ளும், உன்னைச் சுற்றியும், கடந்தும் புறமும் உள்ளார். உன் உள்ளே உள்ள கடவுளும், பிரபஞ்சப் பெருவெளியோடு கலக்கும்போது ஏற்படும் அனுபவமே ஞானப் பெருநிலை ஆகும். கடுமையான தவம் மேற்கொண்டு தனது சித்து விளையாடல்கள் மூலம் பக்தர்களை ஈர்த்தவர் கடுவெளிச் சித்தர் ஆவார்.

கடுவெளிச் சித்தர் வழிபட்ட இறைவன்

கடுவெளிச் சித்தர் இறைவனை வெட்ட வெளியில் வழிபட்டு வந்தார். அவர் வணங்கிய சிவனின் நாமம் - அருள்மிகு பரமானந்தர். அன்னையின் நாமம் ஸ்ரீ வாலாம்பிகை. சித்தர்கள் இறைவனின் தேவியை தங்களுக்கு சக்தி கொடுப்பதற்காக வணங்குவர். கடுவெளிச் சித்தர் பராசக்தியை வாலைக்குமரியாக வழிபட்டார் என்பது

மேலும் சிறப்பு. தேடி வந்த பக்தர்களுக்கு அள்ள அள்ளக் குறையாத வரம் நல்கும் இறை-சக்தித் தலமாக இத்தலம் விளங்குகிறது.

இத்திருத்தலத்து நாயகனாம் பரமானந்தரின் திருத்தலத்தோடு நாயகி, அபயஹஸ்த முத்திரையோடு காட்சி அளித்ததாகக் கூறப்படுகிறது. நான்கு கரங்களில் மேலிரு பொற்கரங்களில் ஒரு கரத்தில் சக்கரமும், மற்றொரு கரத்தில் தாமரை மொட்டும் காணப்படுகின்றது. 'நாராயணி' அம்சமாக தாயார் விளங்குகிறார். காலப்போக்கில் இத்தல நாயகியின் சிலை சிதைந்துள்ளது. நந்தியம்பெருமானும், சிறு பிள்ளையாரும் இங்கு வீற்றிருக்கின்றனர்.

சித்தராலத்தூர்

ஆலயம் அமைந்துள்ள ஊர் கடுவெளி. சித்தர் உறைந்த ஊர் கடுவெளி. அதன் அருகிலுள்ள ஊர் சித்தாலத்தூர். அதாவது கடுவெளிச் சித்தர் அடக்கமானதால், கடுவெளிச் சித்தர் ஆலத்தூர் என்பது நாளடைவில் மருவி கடுவெளிச் சித்தராலத்தூர் என அழைக்கப்பட்டது.

சித்தர்கள் அதிக அளவில் இப்பகுதியில் காணப்பட்டதாக ஆன்மீக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இன்றும் சித்தர்களின் பரிபூரண உலா அந்த ஊரில் இருப்பதாக மக்கள் கூறுகின்றனர். சன்மார்க்க நெறியில் வாழும் மக்கள் இந்த ஊரில் வசிக்கின்றனர்.

மிகவும் பழைமையான கோயில் ஒன்று உள்ளது. அருள்மிகு பிள்ளையார், அருள்மிகு காளியம்மன், அருள்மிகு மாரியம்மன் சிலை உள்ளது.

சன்மார்க்க நெறியிலும், சித்தர்களை வழிபடும் மக்கள் இந்தக் கோயிலில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட அணையா விளக்கு (ஜோதி) ஒன்றினை சித்தர்களுக்காக ஏற்றி வழிபடுகின்றனர்.

சித்தர்கள் வாழ்ந்தும், உலவியும் வந்த இப்பகுதியை இன்றும் புண்ணிய பூமியாக இப்பகுதிவாழ் மக்கள் கருதி 'ஜோதி' வழிபாடு செய்து வருகின்றனர்.

ஜோதி ரூபமாக சித்தர்கள் இந்தப் பகுதி மக்களுக்கு ஆசி அளித்து வருவதாக மக்கள் அறுதியிட்டு கூறி வருகின்றனர். சித்தர் ஆலத்தூர் பகுதியில் உள்ள கோயிலின் அருகில் தியானம் செய்யும்போது மனதிற்கு அமைதியும், நிம்மதியும், மகிழ்ச்சியும் பெறுவதாக இவ்வூர்வாழ் ஆன்மீக மக்கள் கூறுகின்றனர். சித்தர் ஜோதிக்கு அகவல் பாராயணம் பாடப்பெற்று, ஜோதித்திரட்டு வழிபாடு மட்டுமல்லாமல், சங்கடஹர சதுர்த்தி, பிரதோஷ வழிபாடு, பௌர்ணமி வழிபாடும் நடைபெற்று வருகின்றது.

ஜோதி ஸ்வரூபமாய் சித்தர்கள் இப்பகுதியில் உலவி வருவது உறுதி. இங்கு உள்ள பழமையான கோயில் புதுப்பிக்கப்பட்டு வைகாசி 22ஆம் தேதி (22-6-2014) கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இலிங்கத்தடி குளம்

இத்தலத்திலுள்ள தீர்த்தக் குளம் மிகவும் புனிதம் வாய்ந்தது. இலிங்கத்தடி குளம் என அழைக்கப்படுகின்றது. இரண்டு அரச மரங்கள், இரண்டு வேப்ப மரங்களின் நிழல் இந்தத் தீர்த்தக் குளத்தில் வீழ்வதால் மிகவும் புனிதம் வாய்ந்த தீர்த்தமாகக் கருதப்படுகின்றது.

சிவபெருமான் காட்சி அளித்த இலிங்கத்தின் கோயில் அமைந்துள்ள குளக்கரை என்பதால் இத்தலத் தீர்த்தம் 'இலிங்கத்தடி குளம்' என அழைக்கப்படுகிறது.

இத்தலத் தீர்த்தம் சகல நோய்களையும் போக்குகின்றது. இத்தலத் தீர்த்தத்தில் நீராடி சிவபெருமானை வழிபடுபவர்களுக்கு மழலைப்பேறு கிட்டுகின்றது. சகல ரோகங்களைப் (நோய்களை) போக்குகின்றது. சகல பாபம் - சாபம் நீங்கப் பெறுகின்றது. பிறவிப்பிணி தீருகின்றது.

முன்னோர்களுக்கும் திதி கொடுக்கலாம். இந்தப் பிறவியின் புனிதத்துவம் காக்கப்படுகின்றது. கடந்த பிறவியின் கர்மங்கள் தொலையும். பிறவியில்லாப் பெருநிலையை அடைய விரும்புபவர்களுக்கு அவர்கள் எண்ணம் ஈடேறும்.

நல்ல பிறவி வேண்டி தவம் செய்பவர்களுக்கு நற்பிறவிப் பேறு கிட்டும்.

கல்லையும் பிளக்கச் செய்த கடுவெளிச் சித்தர்

திருமறைக்காடு (வேதாரண்யம்) என மிகவும் புகழ்பெற்ற சிவத்தலத்தில் கடுவெளிச் சித்தர் இறைவனை மனமுருகப் பாடினார். அவருடைய அற்புதமான பாடல் வரிகளைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான், அவர் மேல் தாம் வைத்துள்ள அன்பை வெளிக்காட்ட கடுவெளியில் சித்தரின் ஊரிலுள்ள இலிங்கத்தை ஐந்தாகப் பிளக்கச் செய்தார்.

இந்தக் கருத்தை திருமந்திரப் பாடலில் காணமுடிகிறது.

"வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை

அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி ஆகுமே!"

சிவபெருமான் இத்தலத்தில் பஞ்ச பூதங்களாகக் காட்சி அளிப்பதாக பண்டைய ஏடுகள் செப்புகின்றன. பஞ்ச பூதங்கள் என்பது நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகும்.

கடுவெளிச் சித்தரை மகிழ்விக்க இறைவன் ஐந்தாகப் பிளந்த இலிங்கம் இன்றும் அதற்குச் சான்றாக உள்ளது.

கடுவெளி சித்தர் திருச்சிலை

புதிய ஆலயம் அமைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி, கடுவெளிச் சித்தரின் சிலை மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு ஊர்மக்கள், ஊர்ப் பெரியவர்கள், சிவத்தொண்டர்கள், பக்தர்கள், ஆன்மிக ஆர்வலர்கள், சிவாச்சாரியார்கள் ஊர்வலமாக எடுத்துவரப் பட்டு, யாகங்கள் மற்றும் அபிஷேகங்கள் செய்யப்பட்டு பல்வேறு அலங்காரங்கள் செய்யப்பட்டன.

தினமும் காலையும் மாலையும் பூஜைகள் மிகவும் தரம் வாய்ந்த முதல் தரமான தாமரை மலர்கள், வில்வ இலை, பசுவின் பால், உயர்தர பேரீச்சை மற்றும் பழவகைகள், உயர்தர பூஜைப் பொருட்கள் கொண்டு பூஜை செய்யப் படுகின்றது.

சங்கடஹர சதுர்த்தி, பௌர்ணமி பூஜையும், பிரதோஷ பூஜையும், அன்னதானமும் சிறப்பாக நடைபெறுகின்றது. தினசரி அகவல் பாராயணமும், போற்றி வழிபாடும் நடைபெற்று வருகின்றது.

மீண்டும் இப்பகுதியில் கடுவெளிச் சித்தர் பீடமும், ஆலயமும் அமையவிருப்பது தமிழ்நாட்டிற்கே மிகப்பெரிய பாக்கியமாகும்.

எனவே இந்த உயர்ந்த தொண்டில் இணைந்து கடுவெளிச் சித்தர் பீடம், பரமானந்த ஆலயம் அமையத் துணைநின்று வாழ்வில் எல்லா நலன்களும் பெறுவோம்.

ஓம் ஸ்ரீ கடுவெளிச் சித்தரே போற்றி ஓம்
ஓம் ஸ்ரீ வாலாம்பிகை உடனுறை பரமானந்தர் பாதங்களே சரண்.

◆◆◆

3. கடுவெளிச் சித்தர் தரும் வாழ்க்கை வழிமுறைகள்

கடுவெளி என்பது ‘வெட்டவெளி’ அதாவது பிரமம். இந்தச் சித்தர் பிரபஞ்சத்தை வெட்டவெளியாகக் கண்டு தம் ஆத்மானுபவத்தைப் பிறரும் அறிந்து நலம் பெறுவதற்காகப் பாடிய பாடல்கள் கடுவெளிச் சித்தர் பாடல்களாக நமக்கு அறிமுகமாகின்றன. இவரது இயற்பெயரோ வரலாறோ முழுவதும் அறியாத நிலை.

இந்தச் சித்தரைப் பற்றி அறியாத நிலையில் இவர் பாடிய ‘நந்தவனத்தில் ஓர் ஆண்டி’ பாடல் தமிழகமெங்கும் வெகு பிரசித்தம். இவரது பாடல்கள் ஆனந்தக் களிப்பு இராகத்தில் அமைந்துள்ளன.

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி”

என்ன அருமையான சொல்லாட்சி. இலக்கணம் பிறழாமல் அதே சமயம் எளிமை கூட்டி பாடலின் வரிகளைக் கொண்டு இவர் பிற்கால சித்தராயிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

ஏழை ஆண்டி ஒருவன் தினசரி பிச்சையேற்று உண்பவன். தனக்கென்று ஏதும் வைத்துக்கொள்ளாத அவன் ஒருநாள்

நந்தவனம் ஒன்றைக் காண்கிறான். என்ன விதவிதமான வண்ண மலர்கள். வாசம் மிகுந்த மலர்கள் தனிமையில் இங்கு அமர்ந்து இயற்கையை ரசிப்பது எவ்வளவு சுகமாக இருக்கிறது.

அருகில் ஒரு சேய்குளம். நிறைந்துதான் இருக்கிறது ஆனாலும் என்ன பயன்? செடி கொடிகளுக்குத் தேவையான நீர் வானம் மழை பொழியும்போது மட்டுந்தானே கிடைக்கிறது. குளம் நிறைய தண்ணீர் இருந்தாலும் வான் மழையை மட்டுமே எதிர்பார்த்துக் காத்திருக்கும் இந்த நந்தவனத்திற்கு குளத்து நீரை தினசரி ஊற்றினால் எவ்வளவு செழுமையாக இருக்கும்?

ஆண்டியின் கற்பனை அளவுக்கு அதிகமானதுதான். அதனைச் செயலாக்கிப் பார்த்தால்தான் என்ன? பக்கத்து ஊரில் உள்ள குயவன் ஒருவனைப் பார்க்கிறான். தனக்குக் குடம் ஒன்று வனைந்து கொடுக்குமாறு கேட்கிறான்.

குயவன் ஆண்டியை மேலும் கீழுமாகப் பார்க்கிறான். அவனுக்குச் சிரிப்புதான் வருகிறது.

"ஏன் சிரிக்கிறீர்?"

"நீயோ ஆண்டி, உனக்கெதற்கய்யா தோண்டி?" குயவன் குசும்பாகக் கேட்டான்.

"உனக்கெதற்கு அந்தக் கதையெல்லாம். தோண்டி கேட்டால் கொடுக்க வேண்டியதுதானே? எதற்குத் தேவையுற்ற கேள்வி?"

"சரி எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தோண்டி எட்டணா?"

"என்ன தோண்டிக்கு விலையா?"

"ம்... பின்னே என்ன இனாமாகவா தருவார்கள். உன்னைப் பார்த்தாலே வாங்குகிற முகமில்லை என்றுதான் தோன்றுகிறது. உனக்கு எதற்கு தோண்டி என்றேன்."

ஆண்டியின் சுருதி இறங்கிவிட்டது.

"ஐயா நானோ ஆண்டி, எம்மிடம் நீர் விலை சொல்வது நியாயமா? ஏதாவது தர்மம் செய்வதாக நினைத்துக்கொண்டு இந்தத் தோண்டியைத் தரக்கூடாதா?"

ஆண்டியின் பேச்சு குயவன் மனதை இளக்கவில்லை.

"போ, போ, காலையில் வந்து வியாபாரத்தைக் கெடுத்துக்கொண்டு..." குயவன் வேறு வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டான்.

ஆனால் ஆண்டி போகவில்லை. அவன் பார்வையில் படும் இடமாகப் பார்த்து தூரத்தே அமர்ந்து கொண்டான். தினசரி பிச்சை எடுத்த நேரம் போக மீதி நேரத்தை அந்த மரத்தடியில் அமர்ந்து குயவன் வியாபாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாளில்லை ஒருநாள் மனமிறங்கி தோண்டி தரமாட்டானா என்ன?

இப்படியே ஒரு நாளல்ல, ஒரு மாதமல்ல, பத்து மாதங்கள் கடந்து விட்டன. ஆண்டியின் பொறுமை குயவனைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றியது. குயவனும் போனால் போகிறது என்று நன்கு வனைந்த குடமொன்றை அந்த ஆண்டிக்கு அன்பளிப்பாக வழங்கினான்.

ஆண்டியின் மகிழ்ச்சிக்கு அளவேது? ஆகா, இனி என்னைவிட பணக்காரன் உலகில் யாருமில்லை. இந்தக்

குடத்தைக் கொண்டு குளத்து நீரை செடிகளுக்குப் பாய்ச்சுவேன். செடிகளெல்லாம் நிறைய பூக்களைப் பூக்கும். பூக்களையெல்லாம் பறித்துக்கொண்டு போய் நல்ல விலைக்கு விற்பேன். எனக்கு மாபெரும் பொருள் சேரும். அந்தப் பொருளைக் கொண்டு பெரிய மடம் ஒன்றைக் கட்டுவேன். அந்த மடத்தில் நிறைய ஆண்டிகள் தங்குவார்கள்.

ஆண்டி மடம் கட்டினான் கற்பனையில். சரி, கற்பனைக்கு யார் தடை விதிக்கப் போகிறார்கள்? அரும்பாடுபட்டு வாங்கி வந்த தோண்டியை அருமையாகப் பாதுகாக்க வேண்டுமல்லவா? தனக்குத் தோண்டி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் தலையில் வைத்துக் கொண்டு ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிப் பார்த்தான். மகிழ்ச்சியில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் அந்தத் தோண்டியைப் பொத்தென்று கீழே போட்டு உடைத்து விட்டான்.

பத்து மாதங்கள் குயவனிடம் கெஞ்சிக் கூத்தாடி வாங்கி வந்த குடம் பத்தே விநாடிகளில் படார் என்று உடைந்தது. இனியென்ன செய்வது? குயவன் மறுபடியும் ஒரு தோண்டி தருவானா? கேள்விக்குறியுடன் பரிதாபமாகக் குயவனைப் பார்க்கிறான் ஆண்டி.

இது சாதாரண ஆண்டி, குயவன், தோண்டி கதையல்ல. மனிதனின் ஜீவரகசியம். பத்து மாதம் தவமிருந்து கிடைக்கப் பெற்ற உடலை அவன் போற்றி பாதுகாக்காது அற்ப சுகங்களுக்கு ஆசைப்பட்டு வீணே அழித்து வருகிறானே என்ற அனுதாபத்தில் பாடப்பட்டது.

பத்து மாதங்களாகத் தவம் செய்து பெற்றது மனிதா நீ கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைப்பதற்குத்தானோ? அடப்பாவி! எவ்வளவு அருமையான சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறாய். இந்த உடல் உள்ளபோதே ஆன்மா கடைத்தேற வழி காண வேண்டாமா? என்று மனிதனை இடித்துரைக்கின்றார் கடுவெளிச் சித்தர்.

தோண்டியை உடைத்த ஆண்டியைப் போல மேற்கொண்டு என்ன செய்வது என்று நாம் திகைத்திருக்கும் போது தமது அனுபவ உபதேசங்களை அள்ளி விடுகின்றார் சித்தர்.

"தூடணமாகச் சொல்லாதே"

"ஏடணை மூன்றும் பொல்லாதே"

"நல்லவர் தம்மைத் தள்ளாதே"

"பொல்லாங்குச் சொல்லாதே"

"பொய்மொழி, கோள்கள் பொருத்தமாகக்கூட சொல்லாதே"

"பெண்ணாசைக் கொண்டு அலையாதே"

"மனம் போன போக்கு போகாதே"

"மைவிழியாரைச் சாராதே"

"மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்து சேராதே"

"வைதோரைக் கூட வையாதே – இந்த
வையமுழுதும் பொய்த்தாலும் நீ பொய்யாதே"

"வைய வினைகள் செய்யாதே"

"பாம்பினைப் பற்றி யாட்டாதே – உன்றன்
பத்தினிமார் மகளைப் பழித்துக் காட்டாதே"

"கஞ்சா புகையாதே"

"வெறிகாட்டி மயக்கம்தரும் கள்ளைக் குடிக்காதே"

"மூடனுக்கு அறிவுரை புகலாதே"

"கள்ள வேடம் புனையாதே"

"கொள்ளைக் கொள்ள நினையாதே"

என்று செய்யக் கூடாதவற்றையெல்லாம் பட்டியல் இடுகின்றார்.

அப்படி இவையெல்லாம் செய்யக்கூடாதது என்றால் செய்யக்கூடியதுதான் என்ன என்று கேட்பவருக்கு மீண்டும் ஒரு பட்டியலை நீட்டுகின்றார்.

"நல்ல வழிதனை நாடு"

"எந்த நாளும் பரமனை நத்தி தேடு"

"வல்லவர் கூட்டத்திற்கூடு"

"வேத விதிப்படி நில்லு"

"நல்லோர் மேவும் வழியினை வேண்டியே செல்லு"

"சாதக நிலைமையையே சொல்லு"

"பொல்லாத சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு"

"மெய்ஞ்ஞானப் பாதையி லேறு – சுத்த
வேதாந்த வெட்டவெளிதனை தேடு"

மனித வாழ்க்கை நிலையில்லாதது என்பதை 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' பாடல் மூலம் குறிப்பாகச் சொன்ன கடுவெளிச் சித்தர் அந்தக் குறிப்பைப் புரிந்து கொள்ளாத பக்குமில்லாத பாமரர்களுக்குப் புரியும்

வண்ணம் அதே கருத்தமைந்த மற்றொரு பாடலையும் பாடுகின்றார்.

"நீர்மேற் குமிழியிக் காயம் – இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதின் மெத்தவும் நேயம் – சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணு முபாயம்"

அழகான வர்ணஜாலங்களுடன் மிதந்து வரும் நீர்க்குமிழியானது காற்று வேகமாக அடித்தாலோ அல்லது எதன் மீதாவது மோதினாலோ பட்டென்று உடைந்து தெரித்து விடும். மனித வாழ்வும் இப்படித்தான். மாடமாளிகை, ஆள், அம்பு சேனைகளுடன் பெரும் சிறப்புடன் வாழ்ந்தாலும் திடீரென்று அழிவுற்று காணாமல் போய்விடும். இந்த மாயவித்தையின் இரகசியத்தை மனிதா நீ அறிந்து அழியும் உலகப் பொருள்களின் மேல் பற்று வைக்காமல் இருப்பாயாக என்கிறார்.

மேலும் இந்த உலக வாழ்க்கை மட்டுமல்ல, நீகூட நிலையில்லாத ஒரு பொருள்தான். இந்த உலகம் உனக்குத்தான் சொந்தம் என்று உலகிலுள்ள பொருட்களைச் சொந்தம் கொண்டாடிச் சேர்த்து வைக்காதே. இன்று உனக்குச் சொந்தமான அந்தப் பொருட்களெல்லாம் நாளை வேறொருவருக்குச் சொந்தமாகும்.

நீ நிரந்தரமானவன் இல்லை. உன்னை உன் உயிரை என்றைக்காயினும் எமன் கொண்டோடிப் போவான். ஆகையால் பாபஞ் செய்திருப்பாயாக என்று உபதேசமும் செய்கிறார்.

"பாபஞ் செய்யாதிரு மனமே – நாளைக்
கோபஞ் செய்தே யமன்

கொண்டோடிப் போவான்
பாபஞ் செய்யாதிரு மனமே"

முடிந்த வரை உன் வாழ்க்கையில் யாருக்கும் வயிறெரிந்து சாபமிடாதே. ஒவ்வொன்றும் விதிப்படிதான் நடக்கும். ஆகையால் உன் வயிற்றெரிச்சல் அந்த மனிதனை துன்பத்திற்காட்படுத்தும் என்பதையும் அறிந்து கோபத்தைக் கட்டுப்படுத்து என்றும் அறிவுரை கூறுகின்றார்.

"சாபங் கொடுத்திடலாமோ – விதி
தன்னை நம்மாலே் தடுத்திட லாமோ
கோபங் கொடுத்திட லாமோ – இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ"

கடுவெளிச் சித்தர் பாடல்கள் ஆனந்தக்களிப்பு வகையைச் சார்ந்தது. மனித வாழ்க்கைக்கு இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தரும் பாடல்களாதலால் இவைகளை ஆனந்தக் களிப்பில் பாடினாற் போலும்.

"மெய்ஞானப் பாதையிலேறு – சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு – உன்னை
அண்டினோர்க் கானந்தமாம் வழி கூறு"

என்று நாம் செய்ய வேண்டிய வழிமுறைகளைத் தெளிவாகத் தம் பாடலில் கூறியுள்ளார் கடுவெளிச் சித்தர்.

◆◆◆

4. கடுவெளிச் சித்தர் பாடல்கள் மூலமும் - உரையும்

ஆனந்தக் களிப்பு

பாபஞ்செய் யாதிரு மனமே – நாளைக்
கோபஞ்செய் தேயமன்
கொண்டோடிப் போவான்
பாபஞ்செய் யாதிரு மனமே.

மனத்தால் பாவத்தைக் கருதாமலும், செயலால் கருதிய அதைச் செய்யாமலும் இருப்பாயாக. நாள்தோறும் கோபம் கொள்ளாமல் இருப்பாயாக. இல்லாவிட்டால் இயமன் உன் உடலைக் கொண்டு ஓடி மறைவான். ஆகவே மனமே பாவம் செய்யாதிரு.

சாபங்கொடுத்திட லாமோ – விதி
தன்னைநம் மாலே தடுத் திடலாமோ
கோபந் தொடுத்திட லாமோ – இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ

ஒருவருக்குக் கடுமொழியால் சாபம் கொடுக்கக் கூடாது. ஏனென்றால் அவரவர் விதிப்படி நடக்கும் வாழ்வை நாம் திருத்திடவோ, தடுத்திடவோ நம்மால் இயலுமா? கோபத்தையும், விருப்பம் செய்வதையும் பிறர் மேல் நாம் மேற்கொள்வதும் கூடாது.

சொல்லருஞ் சூதுபொய் மோசம் – செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திவிசு வாசம் – எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம்

சொல்லுக்கு அடங்காத தீமை தரும் சூது, பொய், மோசம் ஆகியவற்றைச் செய்தால் உன்னை மட்டுமல்லாது, உன் சுற்றத்தையும் முழுமையாக இல்லாமல் செய்திடும்.

நீர்மேற் குமிழியிக் காயம் – இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதில் மெத்தவும் நேயம் – சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணு முபாயம்

இவ்வுடம்பு நீரில் தோன்றும் குமிழிபோல் நிலையில்லாது அழியும். இந்த மாயத்தை நீ அறிந்து கொள். இந்த உலகில் மிகவும் பற்று வைக்காதிருந்தால் அதுவே நல்லவழி (உபாயம்) காட்டி உன்னை உயர்த்தும்.

(காயம் - உடம்பு)

நந்த வனத்திலோ ராண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

கடவுள் அவரவர் வினைக்கு ஏற்றபடி 24 ஆன்ம தத்துவங்களைக் கொண்டு ஓர் உடல் கொடுக்குமாறு படைப்புக் கடவுளைக் கேட்டுக் கொண்டார். அப்படி வந்த உடலை எடுத்து ஆன்மா கெட்ட வழிகளில் கூத்தாடிக் கூத்தாடித் தோண்டியை உடைப்பதுபோல் பெற்ற உடலை இழந்து மீண்டும் கடைத்தேறாமல் போனது.

தூடண மாகச்சொல் லாதே – தேடுஞ்
சொத்துக்க ளிலொரு தூசும்நில் லாதே
ஏடணை மூன்றும் பொல்லாதே – சிவத்
திச்சைவைத் தாலெம லோகம் பொல் லாதே

எதையும், அல்லது யாரையும் பழித்துச் சொல்லாதே. தேடும் செல்வத்தில் ஒரு தூசுகூட நில்லாது போய்விடும். மூன்று விதமான ஏடணைகளும், பொல்லாதவையாகும். சிவத்தின் மேல் ஆர்வம் கொண்டால் இயம லோகம் போகாதிருக்கலாம்.

நல்ல வழிதனை நாட – எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு – அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக்கொண் டாடு

நல்ல வழியையே விரும்பு. எந்நாளும் சிவனையே தேடு. நல்லவர், வல்லவர் கூட்டத்தில் சேர்ந்திரு. அந்த வள்ளலையே (சிவனையே) நெஞ்சில் வாழ்த்திக் கொண்டாடு. இத்தலத்து இறைவன் பெயர் பரமநாதர் என்பது இதன் மூலம் தெரிகின்றது.

நல்லவர் தம்மைத்தள் ளாதே – அறம்
நாலெட்டில் ஒன்றேனும் நாடித்தள் ளாதே
பொல்லாங்கில் ஒன்றுங்கொள் ளாதே – கெட்ட
பொய்ம்மொழிக் கோள்கள் பொருந்த விள்ளாதே

நல்லவர்களை விட்டு விலகாதே. முப்பத்திரண்டு அறங்களில் ஒன்றையும் தவற விடாதே. பொல்லாத செய்கைகளில் ஒன்றையும் மேற்கொள்ளாதே. கெட்டவர்கள் கூறும் பொய்மொழிக் கொள்கைகளைப் பொருந்துமாறு சொல்லாதே.

வேத விதிப்படி நில்லு – நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
சாதக நிலைமையே சொல்லு – பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு

மறைநூல்கள் கூறுகின்ற விதிமுறைப்படி நின்று காட்டு. நல்லவர்களாகிய ஆன்றோர்கள் செல்கின்ற நன்னெறியில் நீயும் விரும்பிச் செல். எப்போதும் எல்லோருக்கும் நன்மை தரும் கருத்தைச் சொல். தீமையை விளைவிக்கும் கீழ்த்தரமான கோபத்தை, மன வைராக்கியத்தோடு அழித்துவிடு.

பிச்சையென் றொன்றுங் கேளாதே – எழில்
பெண்ணாசை கொண்டு பெருக்கமா ளாதே
இச்சைய துன்னை யாளாதே – சிவன்
இச்சைகொண் டவ்வழி யேறிமீ ளாதே

எதையும் பிச்சையாக யாரிடமும் கேளாதே. பெண்ணாசை கொண்டு பெரிதும் உழன்று வருந்தாதே. ஆசை உன்னை என்றும் ஆளுமாறு செய்யாதே. சிவன் மீது ஆசை கொண்டு, அவனை அடையும் வழியிலேயே விலகாமல் நின்றிடுக.

மெய்ஞ்ஞானப் பாதையி லேறு – சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு – உன்னை
அண்டினோர்க் கானந்த மாம்வழி கூறு

மெய்ஞ்ஞானம் ஆகிய நன்னெறிப் பாதையில் தொடர்ந்து ஏறுக. தூய வேதாந்தம் எனப்படும் வெட்டவெளியை ஆராய்ந்து அறிந்து கொள்க. அஞ்ஞானம்

என்றும் அறியாமை வழியை அறிந்திடுக. உன்னை அண்டி வந்தவர்களுக்கு ஆனந்தமான வழியைக் கூறுக.

மெய்க்குரு சொற்கட வாதே – நன்மை
மென்மேலுஞ் செய்கை மிகவடக் காதே
பொய்க்கலை யால்நட வாதே – நல்ல
புத்தியைப் பொய்வழி தனில்நடத் தாதே

மெய்யான குருவின் சொல்லை விட்டு நீங்காதே. நன்மைகளை மேன்மேலும் செய்வதனை அடக்கி வைக்காதே. பொய்யான உணர்வுடன் நடக்காதே. நல்ல உன் புத்தியை பொய்யான தனித்த வழியில் நடக்க விடாதே.

கூட வருவதொன் றில்லை – புழுக்
கூடெடுத் திங்கள் உலவுவதே தொல்லை
தேடரு மோட்சம தெல்லை – அதைத்
தேடும் வழியைத் தெளிவோரு மில்லை

உன் கூடவே வரக்கூடிய பொருள் எதுவுமே இல்லை. புழு உண்டாகும் கூட்டை எடுத்து, அதில் நிலவை உலா வரும்படிச் செய்ய முடியுமா? அந்த மோட்சத்தின் உண்மையான எல்லையை மனிதர்கள் தேடி அதை அடைய முடியும் என்று தெளிந்தோரும் இல்லை.

ஐந்துபேர் சூழ்ந்திடுங் காடு – இந்த
ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும் நாடு
முந்தி வருந்திநீ தேடு – அந்த
மூலம் அறிந்திட வாமுத்தி வீடு

ஐந்து பேர்கள் சூழ்ந்த காடே இந்த உடல். 25 தத்துவங்களும் அடைந்திருக்கும் நாடு இந்த உடல். இந்த உடலைப் பற்றுக்கோடாகக் கொண்டு மூலாதாரத்தை

வருந்தி நீ தேடுவாயாக. அந்த மூலாதாரத்தை அறிந்தாலே முத்திதான் வீடாகும்.

உள்ளாக நால்வகைக் கோட்டை – பகை
ஓடப் பிடித்திட்டால் ஆளலாம் நாட்டை
கள்ளப் புலனென்னும் காட்டை – வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம் வீட்டை

நமக்குள்ளேயே நான்கு வகைக் கோட்டைகள் உள்ளன. அங்கே உடல் பகை, உள்ளப் பகையை விரட்டி, கள்ளப் புலன்களாகிய காட்டை வெட்டியழித்துக் கனலில் எரித்தால் முடிவில் முத்தி என்னும் வீட்டைக் காணலாம்.

காசிக்கோ டில்வினை போமோ – அந்தக்
கங்கையா டில்கதி தானுமுண் டாமோ
பேசமுன் கன்மங்கள் சாமோ – பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ

காசிக்குப் போனால் நம் வினைகள் நீங்குமா? அங்கு உள்ள கங்கையில் நீராடினால் நற்கதி கிடைக்கும் என்பது உண்மையா? பலவித தத்துவங்களைப் பேசினாலே நம்முடைய கர்மவினைப் பயன்கள் போய்விடுமோ? நம்மிடையே பலவித வேற்றுமைகளைக் கைக்கொண்டு இருந்த கடவுளைப் போற்றுவதால் மட்டுமே கர்மங்கள் தொலைந்து போகா.

பொய்யாகப் பாராட்டுங் கோலம் – எல்லாம்
போகவே வாய்த்திடும் யாவர்க்கும்போங் காலம்
மெய்யாக வேசுத்த சாலம் – பாரில்
மேவப் புரிந்திடில் என்னனு கூலம்

பொய்யான வடிவங்களைப் போற்றி வழிபட்டால் இவ்வுலகை விட்டு நம் உயிர் போகும் காலத்தில் நன்மை

கிடைக்குமா? சுத்தமான தந்திரத்தை (சாலம்) மெய்யாக நம்பினாலும் அனுகூலம் எதுவும் இல்லை.

சந்தேக மில்லாத தங்கம் – அதைச்
சார்ந்துகொண் டாலுமே தாழ்வில்லா பொங்கம்
அந்தமில் லாதவோர் துங்கம் – எங்கும்
ஆனந்த மாக நிரம்பிய புங்கம்

இறைவன் மாசில்லாத தங்கம் போன்றவர். அவரை நாம் உணர்ந்தால் குறைவில்லாத மகிழ்ச்சி கிடைக்கும். இறைவன் ஆரம்பமும் முடிவும் இல்லாதவர். இதனை நாம் உணர்ந்தால் ஆனந்தமாக இருக்கலாம்.

பாரி லுயர்ந்தது பத்தி – அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி
சீரி லுயரட்ட சித்தி – யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினால் பத்தி

உலகில் உயர்ந்தது பக்தி. அதைப் பற்றிக் கொண்டவர்க்கே முத்தி கிடைக்கும். எல்லாரும் சிவனிடம் பத்தி செலுத்தினால் சிறப்புடைய அட்டமா சித்திகள் கிடைக்கும்.

(அட்டமாசித்தி - எட்டு வகையான உயர்ந்த பயன்கள்)

அன்பென்னும் நன்மலர் தூவிப் – பர
மானந்தத் தேவின் அடியினை மேவி
இன்பொடும் உன்னுட லாவி – நாளும்
ஈடேற்றத் தேடாய்நீ இங்கே குலாவி

அன்பு என்னும் நல்ல மலரைத் தூவி, பரமானந்தமான தெய்வத்தின் அடியினை விரும்பி இன்பமுடன் உன் உடல், ஆவி எல்லாம் நாளும் ஈடேற இங்கிருந்தே முயற்சி

செய்வாயாக. பரமானந்த தெய்வம் என கடுவெளிச் சித்தர் இத்தல இறைவனைக் குறிப்பிடுகின்றார்.

ஆற்றறும் வீடேற்றங் கண்டு – அதற்
கான வழியை யறிந்து நீ கொண்டு
சீற்றமில் லாமலே தொண்டு – ஆதி
சிவனுக்குச் செய்திடிற் சேர்ந்திடுக் கொண்டு

எளிதில் பெற முடியாத வீடு பேற்றின் பெருமையை உணர்ந்து, அதற்கான வழிகளை அறிந்துகொண்டு, சிறிதும் கோபம் இல்லாது, ஆதியாகிய சிவனுக்கே இடைவிடாது தொண்டு செய்தால், அவனே அந்த வீடாகிய முத்தியில் கொண்டுபோய்ச் சேர்த்திடுவான்.

ஆன்மாவா லாடிடு மாட்டந் – தேகத்
தான்மா அற்றபோதே யாமுடல் வாட்டம்
வான்கதி மீதிலே நாட்டம் – நாளும்
வையி லுனக்கு வருமே கொண் டாட்டம்

ஆன்மாவால் ஆடிடும் இந்த ஆட்டம் தேகத்தில் ஆன்மா இருக்கும் போதேயாகும். உடல் வாடினால் வான் உலகின் மேல்தான் நாட்டம் உண்டாகும். நாளும் இப்படி விருப்பம் கொண்டாடும் கொண்டாட்டம் உனக்கு வரும்.

எட்டு மிரண்டையும் ஓர்ந்து – மறை
எல்லா முனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து – ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து

எட்டுக்குரிய 'அ', இரண்டுக்குரிய 'உ' என்னும் எழுத்துக்களுக்கு உடம்பில் உள்ள பாகம் தொப்புள் முதல்

தொண்டை வரையாம். இதை நன்கு உணர்ந்தால் வேதம் எல்லாம் உனக்குள்ளேயாகும்.

(வேதம் - யோகம்)

இந்த வுலகமு முள்ளுஞ் – சற்றும்
இச்சைவை யாமலே எந்நாளுந் தள்ளு
செந்தேன்வெள் ளமதை மொள்ளு – உன்றன்
சிந்தைதித் திக்கத் தெவிட்டவுட் கொள்ளு

இந்த உலகத்திலும் உனக்குள்ளும் எந்தப் பற்றும் ஆசையும் வைக்காமல் எந்நாளும் இதை வெறுத்திடுக. இதனால் உனக்குள் செந்தேன் வெள்ளமாகப் பெருகுவதை மொண்டு கொள்க. உன் சிந்தை தித்தித்துத் தெவிட்டும் அளவுக்கு அதனைப் பருகுக.

பொய்வேதந் தன்னைப் பாராதே – அந்தப்
போதகர் சொற்புத்தி போதவோ ராதே
மைவிழி யாரைச்சா ராதே – துன்
மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்து சேராதே

பொய்யான வேதத்தைப் பாராதே. அந்த வேத போதகர் சொல்லிலும் புத்தியைச் செலுத்தி ஆராயாதே. மை எழுதிய கண்களையுடைய பெண்களைச் சேராதே. கெட்டவர்களுடன் சேர்ந்து மகிழாதே.

வைதோரைக் கூடவை யாதே – இந்த
வைய முழுதும் பொய்த் தாலும்பொய் யாதே
வெய்ய வினைகள்செய் யாதே – கல்லை
வீணில் பறவைகள் மீதிலெய் யாதே

நம்மை வைதவர்களை உடனே திருப்பி வையாதீர்கள். இந்த உலகமே இல்லாது போனாலும் கடவுள் இல்லாது

போகமாட்டார். கொடிய வினைகள் செய்யாதீர்கள். கல் எடுத்து வீணே பறவைகள் மீது எறியாதீர்கள்.

சிவமன்றி வேறே வேண்டாதே – யார்க்குந்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே
தவநிலை விட்டுத்தாண் டாதே – நல்ல
சன்மார்க்க மில்லாத நூலைவேண் டாதே

சிவம் தவிர வேறு தெய்வத்தை விரும்பித் துதிக்காதே. தீங்கு தரும் சண்டையைக் கிளறித் தூண்டிவிடாதே. தவநிலையை விட்டுத் தாண்டாதே. தூய்மையான சன்மார்க்கம் கூறாத நூல்களை விரும்பாதே.

(சன்மார்க்கம் - தூய்மையான நன்னெறிகள்)

பாம்பினைப் பற்றியாட் டாதே – உன்றன்
பத்தினி மார்களைப் பழித்துக்காட் டாதே
வேம்பினை யுலகிலூட் டாதே – உன்றன்
வீறாப்பு தன்னை விளங்க நாட்டாதே

பாம்பைப் பிடித்து ஆடச் செய்யாதே. உன் மனைவியை நீயே பழித்துக் காட்டாதே. வேம்புபோல் கசந்த உணர்வை உலகில் யார்க்கும் உண்டாக்காதே. உன் வீராப்பு யாரிடமும் விளங்கும்படிச் செய்யாதே.

(பாம்பு - இடக்கர் அடக்கலாக ஆ குறையைக் குறித்தது)

போற்றுஞ் சடங்கைநண் ணாதே – உன்னைப்
புகழ்ந்து பலரிற் புகலவொண் ணாதே
சாற்றுமுன் வாழ்வையெண் ணாதே – பிறர்
தாழும் படிக்குநீ தாழ்வைப்பண் ணாதே

பிறர் போற்றும் சடங்கைச் சென்று காணாதே. உன்னை நீயே புகழ்ந்து பிறரிடம் சொல்லாதே. பேசுவதற்கு முன்

வாழ்வு பற்றி கனவு காணாதே. பிறர் தாழும்படி எந்தத் தாழ்வும் செய்யாதே.

கஞ்சாப் புகைபிடி யாதே – வெறி
காட்டி மயங்கியே கட்குடி யாதே
அஞ்ச வுயிர்மடி யாதே – புத்தி
அற்றவஞ் ஞானத்தி னூல்படி யாதே

கஞ்சாப் புகையை உட்கொள்ளாதே. போதைக்கு மயங்கிக் கள் குடிக்காதே. உயிர்க்கொலை செய்யாதே. அறிவை மயக்கும் அஞ்ஞான நூல்களைப் படிக்காதே.

பத்தி யெனுமேனி நாட்டித் – தொந்த
பந்தமற் றவிடம் பார்த்ததை நீட்டி
சத்திய மென்றதை யீட்டி – நாளுந்
தன்வச மாக்கிக்கொள் சமயங்க ளோட்டி

பத்தியை நிலைநாட்டி, சொந்தமும் பந்தமும் இல்லாத இடத்தைப் பார். அதில் நீண்ட நேரம் இரு. சத்தியமான கடவுளை அங்கிருந்து நினைத்துப் பார். நாள்தோறும் இவ்வாறு செய்து, அதை உன் வசம் ஆக்கிவிடு. சமயங்களில் உன்னை ஈடுபடுத்தாதே.

செப்பரும் பலவித மோகம் – எல்லாம்
சீயென் றொறுத்துத் திடங்கொள் விவேகம்
ஒப்பரும் அட்டாங்க யோகம் – நன்றாய்
ஓர்ந்தறி வாயவற் றுண்மைசம் போகம்

சொல்ல முடியாத பலவித தீய ஆசைகள் எல்லாவற்றையும் சீயென்று விலக்கித் தள்ளு. திடம் தரும் விவேகமான அட்டாங்க யோகத்தை நன்கு சிந்தித்து அறிவாய். அதனால் உண்மையான சம்போகம் (கூடல் அனுபவம்) உனக்குக் கிடைக்கும்.

எவ்வகை யாகநன் னீதி – அவை
எல்லா மறிந்தே யெடுத்துநீ போதி
ஒவ்வாவென்ற பல சாதி – யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்த்துற வோதி

எவ்வகையான நல்ல நீதிகள் எங்கெங்கு உண்டோ, எல்லாம் அறிந்து பிறருக்கு எடுத்துச் சொல்க. ஒவ்வாதன வாகிய பல சாதிகள் யாவும் ஒன்று என்றே அறிந்து உணர்ந்து நன்கு தெளிந்திடுக.

கள்ளவே டம்புனை யாதே – பல
கங்கையி லேயுன் கடம்நனை யாதே
கொள்ளைகொள் ளநினை யாதே – நட்புக்
கொண்டு பிரிந்துநீ கோள்முனை யாதே

கள்ளத்தன்மையாய் பத்தி வேடம் புனையாதே. கங்கை முதலிய பல புண்ணிய தீர்த்தங்களிலும் நீ முழுகாதே. கொள்கையாகப் பிறர் பொருளை கொள்ள நினைக்காதே. நட்புக் கொண்டவர் பற்றி அவருக்குப் பின்னால் கோள் மூட்டாதே.

எங்குஞ் சயப்பிர காசன் – அன்பர்
இன்ப இருதயத் திருந்திடும் வாசன்
துங்க அடியவர் தாசன் – தன்னைத்
துதிக்கிற் பதவி அருளுவன் ஈசன்

எங்கும் பிரகாசிக்கும் வெற்றியுள்ள கடவுள் அன்பர்கள் இதயத்தில் இன்பமாய் இருந்திடும் வாசன் அடியார்களுக்கு அடியவன். தன்னைத் துதிக்கிறவர்களுக்கு நல்ல பதவி அருளும் ஈசன்.

இவ்வாறு வாழ்வியல் தத்துவங்களை எளிதான பாடல்கள் மூலம் விளக்கியுள்ள கடுவெளிச் சித்தர், அதிக

முக்கியத்துவம் கொடுத்துள்ளது சிவசிந்தனையை மனதில் ஏற்று இறைவழிபாடு செய்வதைத்தான்.

அது மட்டுமல்ல, தீய செயல்களில் ஈடுபடக்கூடாது; பிறரை குறைகூறக் கூடாது; தீய ஆசைகள் கூடாது; சடங்குகள் வீணானது; மனைவியைப் பழிக்கக்கூடாது; நட்பைக் குறைகூறக் கூடாது;

கள்ளத் தன்மையான பக்தி வேடம் பூணக்கூடாது; தற்பெருமை புகழ்ச்சி கூடாது; நீதியை எடுத்துச் சொல்ல வேண்டும்; எல்லா சாதிகளையும் ஒன்றாக நினைத்தல் வேண்டும்;

கள்ளைக் குடிக்கக் கூடாது; கஞ்சா புகைக்கக் கூடாது; கர்மத்தைத் தொலைக்க வேற்றுமைகளைக் களைய வேண்டும் - என்பதான மனிதன் தன் வாழ்வில் செய்ய வேண்டியவற்றையும், செய்யக் கூடாதவற்றையும் கூறி மக்களை நல்வழிப்படுத்தியுள்ளார்.

செய்த பாவம், செய்யும் பாவம் இரண்டையும் போக்க நிறைய வழிமுறைகளைக் கூறியுள்ளார். பாவம் செய்யாதே. அட்டாங்க யோகம் செய். மிகவும் துன்பப்பட்டு பெறப்பட்ட இவ்வுடலை வீணே பாவத்தில் ஈடுபடச் செய்து, கடைத்தேற வழியில்லாமல் செய்துவிடாதே.

சிவத்தின் மேல் ஆர்வம் வை. இமயலோகம் போகாதிருக்கலாம். எந்நாளும் சிவனையே தேடு. சிவனை வள்ளல் எனவும், நெஞ்சில் வாழ்த்திக் கொண்டாடு என்றும் கூறுகிறார்.

இவர் வெட்டவெளி விஞ்ஞானி. வெட்டவெளியில் உட்கார்ந்து இறை பக்தியோடு, இறைஉணர்வோடு யோகம்,

தவம் செய்ய அஞ்ஞானம் மறையும். பக்தி மூலமே முக்தி கிட்டும். மோட்சம் அடைய கர்மாவைக் கரை. கர்மா கரைந்தால் உனக்கு வீடு பேறு கிட்டும். உன்னை மோட்சத்தில் கொண்டு சேர்க்கும் இறை சக்தி சிவமே. அந்தச் சிவனுக்கே இடைவிடாது தொண்டு செய் என்றார்.

இத்தலத்து இறைவனாம் ஸ்ரீ பரமநாதரையும், அருள்மிகு வாலாம்பிகையையும், மகான் ஸ்ரீ கடுவெளிச் சித்தரையும் வழிபட கீழ்க்கண்ட நற்பலன்கள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

- முற்பிறப்பு பாவங்களும், பித்ரு சாபமும் நீங்கிட இங்கு மோட்ச தீபம் ஏற்றி வழிபடலாம்.
- 'பூராட' நட்சத்திரத்திற்கு உரியவர்கள் வணங்கி நல்வாழ்வு பெற்றிட ஏற்ற தலம்.
- திருமணத் தடை நீங்கும்.
- குழந்தை பாக்கியம் ஏற்படும்.
- இருதய நோய் நீங்கும்.
- உஷ்ண சம்பந்தமான நோய்கள் நீங்கும்.
- ஜாதகத்தில் சூரிய கிரகத்தால் ஏற்படக்கூடிய தோஷங்கள் நீங்கும்.
- பிரபஞ்ச வழிபாட்டிற்குரிய தலம்.
- சித்தர்கள் அனைவரும் ஒருசேர உலவக்கூடிய இடம்.
- கடுவெளிச் சித்தரின் ஜீவஒளி சமாதி பீடம் என்பதால் 'தீபம்' ஏற்றி பாபம் போக்கலாம்.

- இத்தலத் தீர்த்தத்தில் குளித்து முன்னோர்களுக்கு நேர்த்திக்கடன் செய்யலாம்.
- தீப தரிசனம் பாவ - சாபம் போக்கும்.
- அன்னதான கைங்கரியத்தில் கலந்து கொள்பவர்களுக்கு சித்தரின் பரிபூரண ஆசி கிட்டும்.
- அன்னதானத்தில் கலந்துகொண்டு உணவு சாப்பிட, நோய் தீரும். மழலைப்பேறு கிட்டும்.
- திருமணத் தடை நீங்கும்.
- கல்வி, வேலையில் உயர்வு, வாகன யோகம் ஏற்படும்.
- இந்த ஆலயம் கட்டும் புண்ணிய பணியில் ஈடுபட்டு பொருள் உதவி, உடல் உழைப்பு தருபவர்களின் பூர்வ ஜென்ம சாபம் நீங்கி மகிழ்ச்சி பெறுவர். இந்தப் பிறவி பூரணப்பட்டு புனிதம் அடையும்.

மறுபிறவி பற்றி இறைவன் முடிவு செய்வான். மலம் அறுப்பான், நிச்சயம்!

சிவ புண்ணியங்கள் என பண்டைய நூல்கள் கூறுவது

- பாழடைந்த சிவன் கோவிலை புதுப்பிக்க பண உதவி செய்தால் நூறு மடங்கு புண்ணியங்கள் கிட்டும். நமது பூர்வ ஜென்ம பாவங்கள் நீங்கும்.
- கோவிலுக்கு மதில், கோபுர மண்டபம் கட்ட உதவி செய்தால் நமது பிறவி துயர் உட்பட எல்லாவித துன்பங்களையும் சிவபெருமான் நீக்கிவிடுவார்.
- பாழடைந்த சிவாலயத்தைப் புதுப்பிக்க 8 செங்கல்லாவது கொடுத்து உதவினால் இந்த உடல்

எடுத்த முழுப் பயனையும் அடைவதோடு முக்தி நிலையும் கிட்டும்.

- பாழடைந்த சிவாலயம் கட்டிட நீங்கள் செய்யும் ஒவ்வொரு உதவியும் உங்கள் முன்ஜென்ம பாவ சாபங்களைப் போக்கும்.

முடிவுரை

சித்தர்கள் பிறந்த இடம், வாழ்ந்த இடம், அசைவாடிய இடம், முக்தி பெற்ற இடம் யாவும் புண்ணியம் நல்கும் இடங்களாகும்.

மனதை அடக்கி வெட்டவெளியில் தியானம் செய்யும் அற்புத தத்துவத்தை கற்றுத்தந்த வெட்டவெளி விஞ்ஞானி இவ்வுலக மக்கள் நல்வாழ்விற்கு வழிகாட்ட கடுவெளியில் உள்ளார்.

ஸ்ரீ வாலாம்பிகை உடனுறை பதவி தரும் ஸ்ரீ பரம நாதர் ஆலயமும் கடுவெளிச் சித்தரின் தியான சித்தர் பீடம் பெரிய அளவில் கட்டப்பட்டு தலைமுறை, தலைமுறையாக பக்தர்களுக்கு அருள்பாலிக்கச் செய்யும் பொறுப்பு - இந்த புத்தகத்தினைப் படிக்கும் நல் உள்ளங் களைச் சார்ந்தது.

இந்தக் கடுவெளி சித்தரின் தியான பீடம், பரமானந்த சுவாமியின் கோயிலும் கட்ட பொருள் உதவி, நிதியுதவி செய்யும் அன்பர்களின் அனைத்து பாவ சாபங்களும் தீரும் என்பதும் நல்ல பதவி, நல்ல குடும்பம், நல்ல வேலை, வியாபார உயர்வு, வாகன யோகம், வேலை உயர்வு, திருமணம் இவ்வாறு எல்லா வளங்களும் நிறைந்து பரிபூரண ஆசிபெற கடுவெளி சித்தரின் ஆலயம் அமைக்க அனைவரும் ஒன்று கூடுவோம்.

கடுவெளி சித்தரின் பரிபூரண ஆசிர்வாதம், சித்தி நமக்கு கிட்டும்.

ஓம் ஸ்ரீ கடுவெளி சித்தரின் பொற்பாதங்களே சரண்!

ஓம் ஸ்ரீ கடுவெளி சித்தரே போற்றி!

ஓம் ஸ்ரீ என் நல்நெஞ்சே சித்தர் பாதம் சரணாகதி அடை!

◆◆◆



5. கடுவெளி சித்தர் 108 போற்றி ஓம்

1. ஓம் ஸ்ரீ கடுவெளியில் அமைந்துள்ள பரம்பொருளே போற்றி ஓம்
2. ஓம் ஸ்ரீ மனதை அடக்க கற்றுத் தந்தவரே போற்றி ஓம்
3. ஓம் ஸ்ரீ சித்தர் ஆலத்தூர் அருகே அமைந்துள்ள மெய்ஞானக் குருவே போற்றி ஓம்
4. ஓம் ஸ்ரீ கடுமையான பாபம், சாபம் போக்கும் கடுவெளி சித்தரே போற்றி ஓம்
5. ஓம் ஸ்ரீ பரமானந்த சுவாமியை வழிபட்ட சித்தரே போற்றி ஓம்
6. ஓம் ஸ்ரீ வாலாம்பிகை தாயை வழிபட்ட சித்தரே போற்றி ஓம்
7. ஓம் ஸ்ரீ கடுமையான தவம் இருந்த சித்தரே போற்றி ஓம்
8. ஓம் ஸ்ரீ வெட்டவெளியில் தியானம் செய்ய கற்றுத் தந்த சித்தரே போற்றி ஓம்
9. ஓம் ஸ்ரீ தியானம், தவம், யோகம் மூலமே இறைவனை அடைய முடியும் என உணர்த்தியவரே போற்றி ஓம்
10. ஓம் ஸ்ரீ பக்தி செய், இறை உணர்வைப் பெறுவாய் என்றவரே போற்றி ஓம்
11. ஓம் ஸ்ரீ பதினெட்டு சித்தர்களில் ஒருவரே போற்றி ஓம்
12. ஓம் ஸ்ரீ நல்ல வழியில் நாளும் செல் என்றவரே போற்றி ஓம்

13. ஓம் ஸ்ரீ நல்லவர்கள் குழுவில் நாளும் சேர் என்றவரே போற்றி ஓம்

14. ஓம் ஸ்ரீ வள்ளலாகிய பரமனை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு என்றவரே போற்றி ஓம்

15. ஓம் ஸ்ரீ பரமானந்த தேவனின் இரண்டு பாதங்களையும் தொழு என்றவரே போற்றி ஓம்

16. ஓம் ஸ்ரீ உன் உடல், உயிர் இரண்டும் உய்ய பரமனை வழிபடு என்றவரே போற்றி ஓம்

17. ஓம் ஸ்ரீ வேதாரண்யத்திலிருந்து (திருமறைக்காடு) சிவனை துதித்து வணங்கியவரே போற்றி ஓம்

18. ஓம் ஸ்ரீ உம் பாடல் கேட்டு கடுவெளியில் சிவனே லிங்கத்தைப் பிளந்து அதிலிருந்து காட்சி தந்தவரே போற்றி ஓம்

19. ஓம் ஸ்ரீ சிவனை வழிபடு என்றவரே போற்றி ஓம்

20. ஓம் ஸ்ரீ நல்லவர்களை நாளும் வாழ்விப்பவரே போற்றி ஓம்

21. ஓம் ஸ்ரீ பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்த மகா சித்த புருஷரே போற்றி ஓம்

22. ஓம் ஸ்ரீ கடுவெளி பிரபஞ்சப் பெருவெளியை ஆட்சி செய்தவரே போற்றி ஓம்

23. ஓம் ஸ்ரீ வெட்டவெளி விஞ்ஞானியே போற்றி ஓம்

24. ஓம் ஸ்ரீ பரமனின் தேவி சக்தியை வாலை என்று அழைத்தவரே போற்றி ஓம்

25. ஓம் ஸ்ரீ இறை சக்தியை வணங்க வணங்க உன் இதயம் இலகுவாகும் என்றவரே போற்றி ஓம்

26. ஓம் ஸ்ரீ உன் உள், புறம் இரண்டையும் ஒழுங்காக இயக்கு என்றவரே போற்றி ஓம்

27. ஓம் ஸ்ரீ மெய்ஞ்ஞானப் பாதையில் செல் என்றவரே போற்றி ஓம்

28. ஓம் ஸ்ரீ சுத்த வேதாந்தத்தினை வெட்ட வெளியில் தேடு என்றவரே போற்றி ஓம்

29. ஓம் ஸ்ரீ இப்பிறப்பு, முற்பிறப்பின் பாவம் போக்கும் வழி கூறியவரே போற்றி ஓம்

30. ஓம் ஸ்ரீ மறுபிறப்பின் நல்வினைக்குக் காரணமானவரே போற்றி ஓம்

31. ஓம் ஸ்ரீ மனதாலும் தீயவை எண்ணாதே என்றவரே போற்றி ஓம்

32. ஓம் ஸ்ரீ பாவம் செய்யாதிரு என்றவரே போற்றி ஓம்

33. ஓம் ஸ்ரீ பாவம் செய்தால் எமன் உன்னை விடமாட்டான் என்றவரே போற்றி ஓம்

34. ஓம் ஸ்ரீ ஒருவருக்கும் சாபம் தராதே என்றவரே போற்றி ஓம்

35. ஓம் ஸ்ரீ உன் விதிப்படி எல்லாம் நடக்கும் என்றவரே போற்றி ஓம்

36. ஓம் ஸ்ரீ பிறர் மேல் கோபம் கொள்ளாதே என்றவரே போற்றி ஓம்

37. ஓம் ஸ்ரீ இச்சை கொள்ளாதிரு என்றவரே போற்றி ஓம்

38. ஓம் ஸ்ரீ சூது, பொய், மோசம் தவிர் என்றவரே போற்றி ஓம்

39. ஓம் ஸ்ரீ யாவரையும் அன்பு செய் என்றவரே போற்றி ஓம்

40. ஓம் ஸ்ரீ தீமைகள் உறவு கெடுக்கும் என்றவரே போற்றி ஓம்

41. ஓம் ஸ்ரீ இவ்வுடம்பு மாயம் என்றவரே போற்றி ஓம்

42. ஓம் ஸ்ரீ இவ்வுலகின் மேல் பற்று வையாதே என்றவரே போற்றி ஓம்

43. ஓம் ஸ்ரீ இப்பிறப்பின் உடம்பை தீயவை புகுத்தி அழிக்காதே என்றவரே போற்றி ஓம்

44. ஓம் ஸ்ரீ பிறரை பழி சொல்லாதே என்றவரே போற்றி ஓம்

45. ஓம் ஸ்ரீ பணமும், காசும் நிலைக்காது என்றவரே போற்றி ஓம்

46. ஓம் ஸ்ரீ சிவபக்தி எமலோகம் தவிர்க்கும் என்றவரே போற்றி ஓம்

47. ஓம் ஸ்ரீ நாளும் நல்வழியில் செய் என்றவரே போற்றி ஓம்

48. ஓம் ஸ்ரீ சிவனை வழிபடு என்றவரே போற்றி ஓம்

49. ஓம் ஸ்ரீ நல்லவர் கூட்டத்திலே நாளும் சேர் என்றவரே போற்றி ஓம்

50. ஓம் ஸ்ரீ வள்ளல் என சிவனை அழைத்தவரே போற்றி ஓம்

51. ஓம் ஸ்ரீ நல்லவர்களோடு நட்பாய் இரு என்றவரே போற்றி ஓம்

52. ஓம் ஸ்ரீ அறங்கள் முப்பத்திரண்டு தவறாதே என்றவரே போற்றி ஓம்

53. ஓம் ஸ்ரீ கெட்டவர்கள் கூறும் பொய்மொழிக் கொள்கைகளை பொருந்துமாறு சொல்லாதே என்றவரே போற்றி ஓம்

54. ஓம் ஸ்ரீ வேத விதிப்படி நில்லாதே என்றவரே போற்றி ஓம்

55. ஓம் ஸ்ரீ நல்லோர் காட்டும் வழியில் செல் என்றவரே போற்றி ஓம்

56. ஓம் ஸ்ரீ கோபம் கொள்ளாதே என்றவரே போற்றி ஓம்

57. ஓம் ஸ்ரீ மெய்ஞ்ஞானப் பாதையில் செல் என்றவரே போற்றி ஓம்

58. ஓம் ஸ்ரீ தூய வேதாந்தம் ஆகிய வெட்டவெளியை ஆராய்ந்து அறிக என்றவரே போற்றி ஓம்

59. ஓம் ஸ்ரீ அஞ்ஞானத்தை ஒழி என்றவரே போற்றி ஓம்

60 ஓம் ஸ்ரீ உன்னை நாடி வந்தோர்க்கு நல்லவழி காட்டுக என்றவரே போற்றி ஓம்

61. ஓம் ஸ்ரீ மெய்ஞ்ஞான குருவின் வழியில் செல் என்றவரே போற்றி ஓம்

62. ஓம் ஸ்ரீ நன்மைகளை மேலும் செய் என்றவரே போற்றி ஓம்

63. ஓம் ஸ்ரீ பொய்யான உணர்வுடன் நடக்காதே என்றவரே போற்றி ஓம்

64. ஓம் ஸ்ரீ உன் புத்தியை நல்ல வழியில் செலுத்து என்றவரே போற்றி ஓம்

65. ஓம் ஸ்ரீ உன் புத்தியை தீய வழியில் செலுத்தாதே என்றவரே போற்றி ஓம்

66. ஓம் ஸ்ரீ உன்னோடு கூட எதுவும் வராது, இதை உணர் என்றவரே போற்றி ஓம்

67. ஓம் ஸ்ரீ மோட்சம் செல்ல கடுமையான தவம் செய் என்றவரே போற்றி ஓம்

68. ஓம் ஸ்ரீ ஐந்து பேர்கள் சூழ்ந்த காடே இந்த வீடு என்றவரே போற்றி ஓம்

69. ஓம் ஸ்ரீ இந்த உடல் இருக்கும் வரைதான் இந்த ஆட்டம் என்றவரே போற்றி ஓம்

70. ஓம் ஸ்ரீ உடல் வருந்த கடும் தவம் செய், வானுலகம் செல்லலாம் என்றவரே போற்றி ஓம்

71. ஓம் ஸ்ரீ இந்த உலகம் மேல் பற்று வையாதே என்றவரே போற்றி ஓம்

72. ஓம் ஸ்ரீ இறைவனின் அன்பு வெள்ளம் உங்களுள் தேனாக பரவட்டும் என்றவரே போற்றி ஓம்

73. ஓம் ஸ்ரீ இறை சிந்தை உங்களுள் தெவிட்டும் அளவிற்கு பரவ வேண்டும் என்றவரே போற்றி ஓம்

74. ஓம் ஸ்ரீ பொய்யான வேதத்தைப் பாராதே என்றவரே போற்றி ஓம்

75. ஓம் ஸ்ரீ வேத போதகர் சொல்லில் புத்தியைச் செலுத்தாதே என்றவரே போற்றி ஓம்

76. ஓம் ஸ்ரீ பெண்களை பழிக்காதே என்றவரே போற்றி ஓம்

77. ஓம் ஸ்ரீ தீயவர்களோடு சேர்ந்து மகிழாதே என்றவரே போற்றி ஓம்

78. ஓம் ஸ்ரீ உன்னை வைதவர்களைத் திருப்பி வையாதே என்றவரே போற்றி ஓம்

79. ஓம் ஸ்ரீ அமுதம் உன்னுள், வேதமே உன்னுள் என்றவரே போற்றி ஓம்

80. ஓம் ஸ்ரீ இவ்வுலகமே இல்லாவிட்டாலும்கூட கடவுள் இல்லாமல் போகமாட்டார் என்றவரே போற்றி ஓம்

81. ஓம் ஸ்ரீ கொடிய வினைகளைச் செய்யாதீர்கள் என்றவரே போற்றி ஓம்

82. ஓம் ஸ்ரீ கல் எடுத்து வீணே பறவைகள் மீது எறியாதீர்கள் என்றவரே போற்றி ஓம்

83. ஓம் ஸ்ரீ சிவம் தவிர வேறு தெய்வத்தை விரும்பித் துதிக்காதே என்றவரே போற்றி ஓம்

84. ஓம் ஸ்ரீ தீங்கு தரும் சண்டையை கிளறித் தூண்டிவிடாதே என்றவரே போற்றி ஓம்

85. ஓம் ஸ்ரீ தவ நிலையை விட்டு தாண்டாதே என்றவரே போற்றி ஓம்

86. ஓம் ஸ்ரீ சன்மார்க்கம் கூறாத நூல்களை விரும்பாதே என்றவரே போற்றி ஓம்

87. ஓம் ஸ்ரீ வேம்பு போல் கசந்த உணர்வை பிறரிடம் உண்டாக்காதே என்றவரே போற்றி ஓம்

88. ஓம் ஸ்ரீ பிறரிடம் வீராப்பு காட்டாதே என்றவரே போற்றி ஓம்

89. ஓம் ஸ்ரீ பிறரைப் பழிக்காதே என்றவரே போற்றி ஓம்

90. ஓம் ஸ்ரீ மூலாதாரத்தை அறிந்தால்தான் முத்தி வீடு என்றவரே போற்றி ஓம்

91. ஓம் ஸ்ரீ நமக்குள்ளே நான்கு வகை கோட்டைகள் உண்டு என்றவரே போற்றி ஓம்

92. ஓம் ஸ்ரீ உடல் பகை, உள்ளப் பகையை விரட்டு என்றவரே போற்றி ஓம்

93. ஓம் ஸ்ரீ கள்ளப் புலன்களை அழி; முடிவில் முத்தி அடைவாய் என்றவரே போற்றி ஓம்

94. ஓம் ஸ்ரீ காசிக்குப் போவதாலோ, கங்கையில் நீராடுவதாலோ உனக்கு நற்கதி கிடைக்காது, இறையருள் வேண்டும் என்றவரே போற்றி ஓம்

95. ஓம் ஸ்ரீ உன் கர்மவினை இறை உணர்வால் மட்டுமே அழியும் என்றவரே போற்றி ஓம்

96. ஓம் ஸ்ரீ பலவித தத்துவங்களைப் பேசுவதால் கர்மவினை தீராது, உன் அகம், புறம் நீ ஒடுக்க வேண்டும் என்றவரே போற்றி ஓம்

97. ஓம் ஸ்ரீ வேற்றுமைகளைக் களை, கடவுளைப் போற்று, முக்தியுண்டு என்றவரே போற்றி ஓம்

98. ஓம் ஸ்ரீ பொய்யான உருவம் தவிர். மெய்ஞ்ஞான கடவுளை நம்பு என்றவரே போற்றி ஓம்

99. ஓம் ஸ்ரீ மந்திரமோ, தந்திரமோ தேவையில்லை, இறை பக்தி வை, முக்தி கிட்டும் என்றவரே போற்றி ஓம்

100. ஓம் ஸ்ரீ சிவபக்தி செய், அஷ்டமா சித்தி கிட்டும் என்றவரே போற்றி ஓம்

101. ஓம் ஸ்ரீ பிறர் போற்றும் சடங்கை நீ விரும்பாதே என்றவரே போற்றி ஓம்

102. ஓம் ஸ்ரீ உன்னை நீயே புகழ்ந்து தற்புகழ்ச்சி அடையாதே என்றவரே போற்றி ஓம்

103. ஓம் ஸ்ரீ அஷ்டாங்க யோகம் செய் என்றவரே போற்றி ஓம்

104. ஓம் ஸ்ரீ நல்ல நீதிகளை பிறரிடம் பகிர்ந்து கொள் என்றவரே போற்றி ஓம்

105. ஓம் ஸ்ரீ இவ்வுலகில் உள்ளோர் யாவரும் ஒன்று என உணர் என்றவரே போற்றி ஓம்

106. ஓம் ஸ்ரீ இறைசக்தி உன்னருகிலும், வெட்ட வெளியிலும், உன் உள்ளும் உள்ளது – இதை உணர் என்றவரே போற்றி ஓம்

107. ஓம் ஸ்ரீ தொண்டர்களின் தொண்டனாக இரு என்றவரே போற்றி ஓம்

108. ஓம் ஸ்ரீ எந்நாளும் உமையாளும், ஈசனுக்கே தொண்டு செய் என்றவரே போற்றி ஓம்

இந்த நூலைப் படிக்கும் அனைத்து பக்தர்களுக்கும் கடுவெளிச் சித்தரின் பரிபூரண ஆசிகள் கிட்டும் என்பதில் ஐயமில்லை.இந்த ஆலயம் அமைக்கும் புண்ணியப் பணியில் ஈடுபடும் யாவரையும் சித்தர் ஆசிர்வதிப்பார் என்பதில் ஐயமில்லை.

வாழ்க கடுவெளிச் சித்தர் புகழ்!


வளர்க கடுவெளிச் சித்தர் நெறி!

வாழ்க வையகம்!!

◆◆◆



ஸ்ரீ கடுவெளி சித்தர்



இடிபாடுகளுடன் காட்சியளிக்கும்
ஸ்ரீ பரமநாத சுவாமி திருக்கோயில்



ஸ்ரீ வாலாம்பிகை
பரமநாத சுவாமி
(கடுவெளி சித்தர்)
ஆலயம் அமைய
இருக்கும் இடம்




சித்தர் பாடிய
பாடல் கேட்டு
வனால் பிளவுபட்ட
லிங்கம்

ஸ்ரீ விநாயகா ஆலயம்



அரச மரத்தின் நிழலும், வேப்ப மரத்தின் நிழலும்
படும் இலிங்கத்தடி குளக்கரை



குளக்கரையில் இரண்டு அரச மரம்,
இரண்டு வேப்பமரம்
இணைந்து காணப்படும் காட்சி



இறைவனால் பிளக்கப்பட்ட இலிங்கத் திருமே
ஸ்ரீ பரமநாதரின் பிரதோஷ அலங்காரக் காட்சி



ஸ்ரீமகான் கடுவெளிச் சித்தர், ஸ்ரீ வாலாம்பிகை -
பரமானந்த சுவாமிகளின் பௌர்ணமி பூஜை காட்சி





க்தர்களின் அதீத முயற்சியால் ஸ்ரீமகான் கடுவெளிச் சித்தரின் சிலை
வடிவமைக்கப்பட்டு வழிபாட்டிற்குத் தயாராகும் காட்சி



ஸ்ரீமகான் கடுவெளிச் சித்தர், ஸ்ரீ வாலாம்பிகை -
பரமானந்த சுவாமிகளின் பௌர்ணமி பூஜை காட்சி





பௌர்ணமி பூஜையில் அன்னதானக் கூடத்தில்
ஊர் பொதுமக்கள்



இப்புனிதப் பணியில் பங்கெடுக்கும் மக்கள்



பௌர்ணமி பூஜையில் அன்னதானக் கூடத்தில்
ஊர் பொதுமக்கள்



இப்புனிதப் பணியில் பங்கெடுக்கும் மக்கள்




இப்புனிதப் பணியில் பங்கெடுக்கும் மக்கள்



மஹாருத்திர யாகக் காட்சி



மஹாருத்திர யாகக் காட்சி



மஹாருத்திர யாகக் காட்சி